ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர்: டாக்டர் V. R. மூர்த்தி

டிசம்பர் 1952

ஐந்து ஆண்டுகள் 2
ஸ்தனத்தில் புற்றுநோய் 4
திருநெல்வேலி ஜில்லா ஹோமியோபதிக் அஸோஸியேஷன் 9
பொதுஜனத்தொண்டர் 11
சிகிச்சை குறிப்பு 18
மதிப்புரை 20

டாக்டர் மூர்த்தியின்

"கோல்டுராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3—12—0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

சென்னை விலாசம்:

289, N. S. C. B. ரோட் — மதராஸ்-1

ஹோமியோபதி

VOL. 6 1952 டிசம்பர் No. 12

ஐந்து ஆண்டுகள்

சென்ற சில ஆண்டுகளில் மிகவும் முன்னேறியுள்ள தொழில்களில் பத்திரிகைத் தொழிலும் ஒன்று. அதிலும் நம் தாய்மொழியான தமிழ் மொழியில் தினம் ஒரு புது பத்திரிகை வீதம் பெருகிக் கொண்டிருக்கின்றது. இவற்றில் பெரும் பாலானவை கதைகளையும், நவநாகரீகச் சரக்குகளைப் பிரபலப் படுத்த விளம்பரங்களையும் பிரசுரிக்கின்றன; மனித னின் ஆரோக்கிய வாழ்விற்கு அறிவூட்டுவதற்கான விஷயங் களை பிரசுரிப்பவை மிகச்சிலவே. அச்சில பத்திரிகைகளுள் ஒன்றான நம் **'ஹோமியோபதி'** தன்னலான தொண்டை இவ்வைந்தாண்டுகளாக ஆற்றிவருகின்றது.

தமிழ் நாட்டில் ஹோமியோபதி ஒரு நிலைமையில் ஊன்ற ஆரம்பித்து விட்டது என்று உணர்ந்தபொழுது, அம்முறை யைக் கையாள்பவர்களுக்கு நடப்பு விஷயங்களை மேலும் மேலும் அறிந்து கொள்வதற்கு ஒரு பத்திரிகை இல்லாம லிருந்தது நமக்கு மிகவும் குறையாகவே இருந்து வந்தது. இக்குறையைத் தீர்ப்பதன்பொருட்டு இம்முறையில் முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த பத்திரிகை நம் **'ஹோமி யோபதி'**. பிற்பாடு ஆங்காங்கு இரண்டொரு சகோதரப் பத்திரிகைகள் தோன்றினும், வெளியிடுவதில் உள்ள பல சிரமங்களின் காரணத்தால் அவை நின்றுவிட்டன என்பதை நாம் அறிந்தபொழுது மிகவும் வருந்தினோம். இம்மாதிரிப் பத்திரிகைகள் வெளியிடுவதிலுள்ள சிரமங்களை அவற்றில் அனுபவம் உள்ளவர்களாலேயே அறிந்துகொள்ள முடியும்.

நம் 'ஹோமியோபதி' இடையில் ஏற்பட்ட பல இடையூறுகளையும் வெற்றிகரமாகக் கடந்து தனது ஐந்து ஆண்டுகளையும் நேர்த்தியாகப் பூர்த்தி செய்திருக்கின்றது. இத்துணை காலமாக இப்பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் நேயர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நேயர்களின் சௌகர்யத்தைக் கருதியே இப்பத்திரிகையின் வருட சந்தா ரூபாய் மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது, தற்போதுள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை நமக்குத் திருப்தியையளித்தாலும், ஒரு பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சியுற இந்த எண்ணிக்கை ஊக்கமளிப்பதாக இல்லை. எனவே வரும் ஆறுவது ஆண்டிற்கு நேயர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாதாரராகச் சேருவதுடன் நில்லாது தங்கள் கிராமங்களிலிருந்து மேலும் இரண்டு மூன்று நண்பர்களையாவது சந்தாதாரராகச் சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுகின்றோம். ஹோமியோபதியருக்கு மட்டிலுமின்றி பாமரருக்கும் பிரயோசனப்படும் கட்டுரைகள் பல அடுத்த ஆண்டில் வெளிவரவிருக்கின்றன.

எனவே தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களும், சங்கங்களும் தங்கள் ஒத்துழைப்பை விடாது நமக்கு அளிப்பர் என்பதே நமது நம்பிக்கை.

ஸ்திரீகளின் சகல கர்ப்பாசயக் கோளாறுகளுக்கு

"சோதரி"

நிகரற்ற ஔஷதம்

விபரங்களுக்கு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

சென்னை விலாசம்:

289, சைனாபஜார் ரோட் - மதராஸ் 1

ஸ்தனத்தில் புற்றுநோய்

டாக்டர் K. K. முத்து (Homoeo)

தோலின் கோளங்களின்மீது கட்டியாகப் புறப்படுவதே புற்று என அழைக்கப்படுகிறது. தசையின் நார்களிலிருந்து புறப்பட்டு வளர்ச்சியுற்ற வெறும்புற்று தேகத்தின் பல பாகங்களிலும் காண்கின்றது இரத்தத்தின் மூலமாகவே கலந்து பலஹீனமான இடங்களிலும், நீடித்த புண் உள்ள இடங்களிலும் புற்று வியாபிக்கிறது. புற்று நோய்களால் சரீரத்தின் ஆக்க சக்திகள் குறைந்து பெரிய வியாதி உற்பத்தியாகக் காரணமாகவும், அழிவிற்கு காரணமாகவும் ஆகிறது.

புற்றுநோயினால் ஏற்படும் மரண எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உலகில் இருதய உபாதிகளால் மரணம் சம்பவிப்பதைக் காட்டிலும் முதன்மையானதாக மரணத்திற்கு "புற்று நோயே" காரணம் என உலக ரிகார்ட் ஏற்படுத்தி இருக்கிறார்கள். சில புற்றுகளை குணப்படுத்த முடியும், சில புற்றுகளை குணப்படுத்துவது கஷ்டசாத்தியமானது. புற்று நோய் உண்டாவதற்கான காரணங்களை வைத்திய உலகம் இன்னும் கண்டறியவில்லை. புற்று பரம்பரை பாத்தியம் கொண்டாடி வந்த பலரிடம் காண்கிறோம். ஆனால் அது ஒட்டுவாரொட்டியல்ல. இந்த நோயை உண்டுபண்ணுவது ஓர்வகை கிருமியே. ஆனால் நிரூபிக்கக்கூடிய சாட்சியங்கள் கிடையாது. ஒருவிதமான எரிச்சல், நீடித்தபுண் முதலியவைகளும் காலடைவில் புற்றுகளாக மாறுகிறது.

கண்ணகி தோன்றிய மண்ணில் பிறந்தும் கற்பை பஞ்சத்திற்கு அடமானம் வைக்கும் சில கேளிக்கை வாசிகளும் புற்று, மற்றும் ஏனைய தீராத வினையாலே வாடிட உற்பத்தி ஸ்தலமாக விளங்கி, ஏராளமான அளவில் 'சிபிலிஸ்'; 'வெட்டை'; 'புற்று' முதலியவைகளை விற்பனை செய்கிறார்கள். உதட்டிலே புற்று உண்டாவதற்கு குழாய்மூலம் புகை குடித்தலே காரணம் என்று கூறலாம். கிரந்தி உண்டான நாளிலும் புற்று உண்டாக

லாம். குளிருக்காக நெருப்பைமூட்டி அந்த அனலில் அதிக நேரம் இருப்பதாலும், அதன் காரணமாக தோலின் கோளங்கள் அதிகமாக சூடேற்றப்படுவதாலும் புற்று உண்டாகிறது. வெற்றிலைபாக்கு, புகையிலை போட்டுக்கொள்ளும் தீராவழக்கத்தினலும் புற்று உண்டாகிறது. சில நாடுகளில் கணவன் சாப்பிட்டு கழித்த (எச்சல் செய்த) உணவுப் பொருளை மனைவி சாப்பிடும் கெட்டவழக்கம் இருந்து வருகிறது. இதனல் வெளித்தோற்றமளிக்காமல் இருக்கும் சில நோய்கள் மனைவிக்கும் பற்றிக்கொள்ளாதா! இதனலும் புற்று வளர எதுவாகின்றது.

சூடான ஆகாரங்களைக் கோழிபோல் விழுங்கக் கூடாது. மற்றும் பாஸ்திரிகமனமும் எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றினர்போல். பணத்திமிரால் அங்குமிங்கும் விளையாடி, உல்லாச வாழ்வு வாழ்ந்து, வாழ்நாளை மதுவும் மங்கையுமாக கழித்து நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமாக வேப்பிலையும் கையுமாக பலர் திரிவதை நாம் பார்த்துதானே வருகிறோம். நோய் பரவ இதைவிட வேறு மார்க்கமேதற்கு.

புற்று பெண்களிடத்திலும், ஆண்களிடத்திலும் பொதுவாக காணப்படுகிறது. பெண்களின் ஸ்தனங்கள், யோனி, ஆண்குறி, உதடுகள், நாக்கு மற்றும் பல இடங்களிலும் காணப்படும். உதட்டில் புற்று பெரும்பாலும் குழாய் வைத்து புகை குடிப்பவர்களுக்கேயும்; மற்றும் கிரந்தி சம்பந்தப்பட்ட விலைமாதர்கள் மூலமும் எற்படலாம். குழாய் மூலம் புகை குடித்தல் ஒரு வீட்டிலிருந்தால், அந்த வீட்டிற்கு வருவோர், போவோர் அனைவரும் அதே குழாயில் வாயை வைத்து தன்னிடம் இருக்கும் நச்சுப்பொருள்களை குழாயில் வைத்து சென்று விடுவர். அதையே தேகாரோக்கியமானவர் எடுத்து வாயில் வைத்து புகையை இழுப்பதால், வியாதிக்கிருமி அவருடலிலும் பாவுகிறது. நிகோடின் விஷம் கிருமியைக் கொன்றுவிடும் என்ற வாதம் இங்கு சரிவராது. புகை குடிப்பதால் அதிகமான திரவம் வயிற்றில் உண்டாகி, அதன் காரணமாக வயிற்றுப்புண் உண்டாகிறது.

நாகரீகம் என தலைகால் தெரியாமல் மதுவை தண்ணீராக உபயோகித்த குடும்பங்கள் இன்று நிலையிலே பெயர் சொல்லக் கூட நாதியற்று தெருத்தெருவாக பசியாலும், நோயாலும் மடிவதை காண்கிறோம். குடிப்பழக்கமுள்ளவர்களுக்கும் புற்று உண்டாகிறது. புற்று அல்லது வேறு எந்த நோயாக இருந்தாலும் ஆரம்ப சிகிச்சையே சாலச்சிறந்தது. பித்தப் பையிலும், புற்றுநோய் உண்டாகலாம். இது மூத்திரத்தாரை யில் பித்தக்கற்கள் அடைப்பதுடன்கூட சார்ந்தது. மூத்திரப் பையிலும் புற்றுநோய் காணலாம். இதில் வளர்ச்சி அதிக துரிதமாகவும், இரத்தப் பெருக்கத்துடனும் இருக்கும். முதல் அறிகுறி மூத்திரத்தில் இரத்தம் காணுவதே. மூத்திரப்பையில் புற்று உண்டாவதில் முதலில் இரத்தம் கண்டு, பிறகு மூத்திரமே வராமல் சதை அடைத்துக்கொள்வதும் உண்டு. இரத்தத்திலும் இது பற்றுகிறது. எலும்புகளில் புற்று காண்பது சாதாரண மானது. ஆனால் புற்று எலும்புகளோடு மட்டும் ஆரம்பிப்ப தில்லை. இரத்தத்தின் மூலம் செல்லும் கிருமிகள் எலும்புகளோ அல்லது சரீரத்தின் எந்த பாகத்திலோ தங்கி வளர்ச்சி யடைகிறது. எலும்புகள் பலஹீனமும், அதிகவலியும், வீக்க மும் விரைவில் ஒடியக்கூடிய தன்மையுடையதாகவும் இருக்கும்.

பெண்களிடையே பொதுவாக ஸ்தனங்களில் கட்டி காண்கிறது. அபூர்வமாக ஆண்களின்பால் காம்புகளிலும் புற்று காண்கிறது. வியாதியுற்ற ஸ்தனங்கள் அதிக வீக்க மாகவும், முலைக்காம்பைச் சுற்றி வலியுள்ளதாகவும், அதிக சிவப்பும் ஸ்தனத்தில் புற்று தோன்ற ஓர் அறிகுறியாகும். சில கேஸ்களில் வலியொன்றுமில்லாமல் புற்று கடினமாக வளரும், பால் காம்புகளிலிருந்து இரத்தமும் தண்ணீரும் கலந்த திரவப் பொருள் காண்பது மற்றொரு குறியாகும். இவ்வியாதையி லுள்ள ஸ்திரீ தன் சிசுவுக்குப் பால் கொடுக்கக் கூடாது. இம்மாதிரியான அறிகுறிகள் தென்பட்டவுடன் தகுந்த சிகிச்சை செய்வதில் காலதாமதம் கூடாது.

புற்றுநோய் நிபுணர், புற்றுநோய் நிவாரணி என பிரபலப் படுத்தும் பத்திரிகை விளம்பரங்களைக் கண்டு யாரும் ஏமாந்து போகக்கூடாது. சிலர் நம்பிக்கையாக ஒரே மனதாக கடவுளை

தியானித்துக் கொண்டு வந்தால் நோய் குணப்பட்டு விடுமென சிபார்சு செய்கிறார்கள். ஆனால் இது அறிவுடைமையல்ல. கஷ்டமான வேலைகளில் அனுகூலமாக சிறிது நேரம் கடவுளை தியானி என்றால் காலரா, பிளேக், அம்மை, புற்று முதலிய நோய்களுக்கெல்லாம் சிலம்பு குத்தி காவடி எடுத்துச் சென்றால் மாத்திரம் நோய் குணமாகி விடுமா?

நான் வைத்தியத்தொழில் ஆரம்பித்த காலத்தில் 28 வயதுடைய வடநாட்டு மார்வாரி பெண் அகதி ஒருத்தி சிகிச்சைக்காக என்னிடம் வந்தாள். அவளுக்கு வலதுபக்க ஸ்தனத்தில் சிறிது கட்டி. இந்தக்கட்டி அவள் புஷ்பவதியான காலத்திலிருந்து உண்டானதாம். கலியாணமான பின்னரும் அது அப்படியே இருந்தது என்றும், நாடு துண்டிக்கப்பட்டபின் நடந்த கலவரத்தில் தன் கணவன் குண்டர்களால் தாக்கப்பட்டு இறந்தாரென்றும், மற்றும் அது சமயங்களில் நேர்ந்த பல வெட்கக்கேடான விபரீதங்களின் காரணத்தால் நாளடைவில் முன்னிருந்ததைவிட புற்று அதிகமாக வளர்ந்துவிட்டதென்றும் பம்பாய் சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்ய மறுத்து விட்டார்களென்றும் கூறினாள்.

முதல்தரமான கிரந்தி உடம்பாகவும், இரத்த சோகை பிடித்தவளாகவும் இருந்தாள். ஸ்தனம் பூராவுமே கடினமான தாக இருந்தது. கொட்டால் தெரிப்புவலி, சிவந்த நிறம், முலைக்காம்பு கடினம், முலைக்காம்பைச் சுற்றிலும் புண்கள் முதலியன இருந்தன. கொப்புளங்களைச் சுற்றி சீழ்கள், அத்துடன் ஓயாத தலைவலி, இவளுடைய குடும்பமே புற்றினால் (Cancer) இறந்திருக்கிறது. இதைவிட மருந்தை தேர்ந்தெடுத்து கொடுக்கும் குறி வேறு எதுவேண்டும்! ஆகவே பாஸிலினம் 200x (Bacillinum)ல் திரவமாக ½ oz தண்ணீரில் 4 துளிகள் விட்டுக்கொடுத்து, மருந்தில்லா மாத்திரையை கொடுத்தனுப்பினேன். ஒரு வாரம் கழித்து பரிசோதனை செய்ததில் முலைகாம்புகளெல்லாம் கடினமாக இல்லாமல் மிருதுத்தன்மையுடன் இருந்தது. வாரத்திற்கு ஒருதரம் மெடோரினம், கார்சினோசின் ரேடியம் முதலியன கொடுக்கப்பட்டன. வீரியம் 200x மூன்று

வாரத்திற்குள் தோலின் நிறங்களும் மாறி கட்டியும் அளவிற்குக் குறைந்து காணப்பட்டது. தெரிப்புவலி குறைந்திருந்தது. மூலைக்காம்புகளும் நல்ல நிலைக்கு வந்துவிட்டன. சீழ்வருவது நின்றது, பிறகு ஒருவாரம் கழித்து அவள் என்னுடன் பேசும் போது இதேமாதிரி புற்று பெண்குறியில் இருப்பதாகவும், இரத்தப்பெருக்கு ஏற்படுவதாகவும், வலி சகிக்கமுடியாத அளவு இருப்பதாகவும், ஆனால் தங்களிடம் மருந்து சாப்பிட்ட பிறகு இந்தக்குறிகளும் குறைவு என்றும் பூரணமாக குணமாக்க வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டாள்.

பரிசோதனைக்காக எனக்கு தெரிந்த நர்ஸிடம் (Midwifery Nurse) அனுப்பி விபரம் தெரிந்து கொண்டேன். தினசரி காலை, மாலை, போட்டாசியம் பேர்மாங்கனேட் கரைத்த டூஷ் கொடுத்து மருந்து எதுவும் கொடுக்காமல் மருந்தில்லா மாத்திரைகளையே கொடுத்து வந்தேன். மறுவாரத்தில் மற்றொரு டோஸ் பாஸிலினம் 200xல் கொடுத்தேன். அடுத்த வாரத்தில் வியாதி பூரண சுகம். இதில் அதிசயம் என்னவென்றால் ஸ்தனத்திலும்; பெண்குறியிலும் புற்றின் தழும்பு தெரியாமல் இருப்பதே!

மேலேகண்டவற்றிலிருந்து புலப்படுவது என்னவெனில் பரம்பரை வியாதிக்குறி ஒத்துள்ள ஔஷதம் பாஸிலினம் கொடுக்காமல், மெடோரினம், கார்சினோசின், ரேடியம் மட்டிலும் கொடுத்திருந்தால் வியாதி குணமாகாது. ஆகையினால் வியாதியின் முக்கிய குறிகளை எடுத்து அலசி ஆராய்ந்து ஹோமியோபதி முறையில் மருந்து கொடுத்தோமானால் வெற்றி நிச்சயம்.

வாழ்க ஹோமியோபதி!

திருநெல்வேலி ஜில்லா
ஹோமியோபதிக் அஸோஸியேஷன்
திருநெல்வேலி

நெல்லை ஜில்லா ஹோமியோபதிக் அஸோஸியேஷனின் முதற்கூட்டத்தை சென்ற 16—11—52 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி சந்திப்பில் ம. தி. தா. இந்துக் கல்லூரியில் அமைப்பாளர்கள் டாக்டர் S. R. P. துரைப்பாண்டியன், சுரண்டை; டாக்டர் G. P. வெண்மதியன், ஸ்ரீவைகுண்டம்; ஆகியோர் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு, டாக்டர் M. சேஷாத்திரி, பாளையங்கோட்டை அவர்களின் தலைமையில் கீழ்க்கண்டபடி பணியாளர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு ஹோமியோபதிக் அஸோஸியேஷனை நிறுவியுள்ளோம்.

பணியாளர்கள்:

தலைவர்: டாக்டர் A. திரவியம் பிள்ளை, பாளையங்கோட்டை.
துணைத்தலைவர்: டாக்டர் M. சேஷாத்திரி, பாளையங்கோட்டை.

செயலாளர்: டாக்டர் S. R. P. துரைப்பாண்டியன், சுரண்டை.
துணைச்செயலாளர்: டாக்டர் G. P. வெண்மதியன்,
ஸ்ரீவைகுண்டம்.

பொருளாளர்: டாக்டர் D. சோமசுந்தரம், பாளையங்கோட்டை.
கமிட்டி மெம்பர்கள்:

டாக்டர் S. நல்லசிவம் பிள்ளை, ஸ்ரீவைகுண்டம்.
„ T. S. ராமச்சந்திரம்பிள்ளையன்,
திருநெல்வேலி.
„ K. P. கிருஷ்ணய்யர், கூனியூர்.
„ கிருஷ்ணய்யர், திருநெல்வேலி.
„ K. J. மதுரம், ஏரல்.
„ செய்யது அப்துல் காதர், மேலப்பாளையம்.
„ ராஜகோபால் பிள்ளை, ரெட்டியாப்பட்டி.

டாக்டர் T. சுந்தரராஜு, சிந்துபூந்துறை.
" கனகசபாபதி, திருநெல்வேலி.
" பிச்சாண்டி, திருநெல்வேலி.

ஆகையால் நெல்லை ஜில்லா ஹோமியோபதியர்கள் அனைவரும் அஸோஸியேஷனில் மெம்பர்களாக அதிவிரைவினில் முற்படவேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்:—

டாக்டர் S. R. P. துரைப்பாண்டியன்,
செயலாளர்,
திருநெல்வேலி ஜில்லா ஹோமியோபதிக் அஸோஸியேஷன்,
சுரண்டை P. O., தென்காசி தாலூகா,
திருநெல்வேலி ஜில்லா.

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஒளஷதங்கள்

1 முதல் 24 ஒளஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

சென்னை விலாசம்

289, N. S. C. B. ரோடு, — மதராஸ்-1

பொதுஜனத்தொண்டர்.

R. ராஜசேகரன் M.I.H.

சிதறியவைகள்:

கட்டி

அல்லோபதி முறையில் ஆப்ரேஷன் செய்யப்பட்டு 15, 20 நாட்கள் படுக்கையிலிருந்து, சகிக்கமுடியாத வேதனையுடன் குணப்படுத்தவேண்டிய ஒரு கட்டியை டாக்டர் V. R. மூர்த்தி அவர்கள் எவ்வித உபத்திரவமும் பத்தியமும் ஆப்ரேஷனுமின்றி தித்திப்பான மருந்தை (கல்கேரியா கார்பு) சில தினங்கள் கொடுத்துக் கரைத்தார்.

பக்ஷவாதம்

டாக்டர் V. R மூர்த்தி அவர்களின் ஆலோசனையின் படி கல்கேரியா கார்பு கொடுத்ததால் பட்சவாதத்தினால் நாளுக்கு நாள் கால் சூம்பலாவது (குறைவது) தடுக்கப்பட்டது.

பரம்பரை வலிப்பு

பிறந்த மூன்றாம் நாளே வலிப்பால் 5 குழந்தைகளைப் பறி கொடுத்த தாயாருக்கு அவர்களின் எட்டாவது கர்ப்ப காலத்தில் 1 பாட்டில் மம்மாடோன் என்னால் கொடுக்கப்பட்டதால் அச் சிசு பிறந்து வலிப்பின்றி சுகமாக இருக்கிறது.

மரண நிலை

32 வயதுள்ள நண்பர் பேதிக்கு சாப்பிட எண்ணி அகஸ்தியர் குழம்பை சாப்பிட்டதால் 3 மணி நேரத்திற்குள், 35 தடவை பேதியாகி உஷ்ணம் 95° யாகக் குறைந்து இருதயத்துடிப்பு நின்று பிரக்ஞை இழந்து கிடந்த போது தோழர் S. ஆறுமுகம் M. I. H. அவர்கள் கண்டு கார்போ விஜி 30 ல் 4 சொட்டு இன்ஜெக்ஷனும், மெர்குறியஸ் சொலுபுலிஸ் 30 ல் 4 வேளை உண்ணவும் கொடுத்து இறக்கும் நிலையிலிருந்த நண்பரைக் காப்பாற்றினர்.

பிரசவ சுரம்

18 வயது பெண்ணிற்கு முதல் பிரசவத்தின் போது ஏற்பட்ட பிரசவ சுரத்தையும் இதர கோளாறுகளையும்; சுமார் 40 வேளை மருந்து மூலம் 7 நாளில் டாக்டர் S. R. P. துரைப்பாண்டியன் M. I. H. அவர்கள் குணப்படுத்தினர்.

கீல்வாதம்

ஆறுமாதமாக கீல்வாயுவிற்கு அநேக அல்லோபதி நேயர்களால் ஊசி போட்டும் தீராது துன்பப்பட்ட 45 வயதுமாதிற்கு டாக்டர். M. R. சாவித்திரி M. I. H. அவர்கள் 12 நாளில் 12 வேளை மருத்தைக் கொண்டு பூரண குணமடையச் செய்தார்.

கருச்சிதைவும் இசிவும்

7 மாத கர்பிணிக்கு திடீரென இசிவு ஏற்பட்டு சிசு கலையும் நிலையிருந்ததை சாமோமில்லா, நக்ஸ், ஆர்ஸ், ஆல்பம் இவற்றைக் கொண்டு இசிவை நிறுத்தி சிசு சிதைவைத் தடுத்து மூன்று நாளில் பூரண குணமடையச் செய்தேன்.

ஸிபிலிஸ்

ஏழுவருஷமாக ஆண்குறியில் ஸிபிலிஸ் சம்பந்தமான புண்களோடு கூடி வெள்ளை நீர் வடிதல், பைத்திய சேஷ்டை, கீழ்த்தாடை ஆட்டம் இவற்றால் பாதிக்கப் பட்டவர்: அல்லோபதி அன்பரின் இஞ்செக்ஷனாலும் குணப்படாமல், பட்டினத்து சர்ஜன் ஆண்குறியின் மலரை வெட்டி விடவும் யோசனை கூற, வேறு சிலர் ஓராண்டு தொடர்ந்து சிகிச்சை பெருமாறும் கூற; யாவும் பிடிக்காமல் டாக்டர் தக்ஷணாமூர்த்தி அவர்களிடம் வந்ததில் அவர் 17 நாளிலேயே குறைந்த செலவில் குறியை எடுக்காமலே குணப்படுத்தியுள்ளார்.

காலரா

காலரா கண்டு மாணநிலையிலிருந்தவரை கோவூர் C. M. ராஜரத்னம் M. I. H. அவர்கள் விராட்ரம் ஆல்பம் ஒரே வேளை கொடுத்து ஒரு தம்பிடி செலவில் சுகப்படுத்தியுள்ளார்.

இவை யாவும் ஹோமியோபதி வைத்தியர்கள் நம் நாட்டில் செய்யும் சிகிச்சைகளின் சிதரலில் சிறு பாகம். இது போன்றும் இதைவிட அதிகமாகவும் பல்லாயிரக் கணக்காக ஹோமியோபதியர்கள் நாட்டிலுள்ள மக்களுக்கு பணியாற்றி னருகின்றனர் பணி.......... சாதாரணபணியா? எண்ணிக் கையிலடங்காத பணி. மகத்தான பணி. அதுவும் ஏழை மக்களுக்கு; விரைவிலும், மிருதுவாகவும், சிக்கனத்துடனும், பத்திய மின்றியும் சிகிச்சை யளிக்கின்றனர். நாட்டின் பஞ்சத்தை அறிந்து பத்தியத்தை விலக்கி, ஏழ்மையை உணர்ந்து செலவைக் குறைக்கி, குறைகிய செலவில் பெரிய நோய்களையும் இலகுவில் குணப் படுத்து கின்றனர்.

இப்படிப் பட்ட ஹோமியோபதியர்களுக்குத் தான் அரசாங்கம் ஆதரவளிக்க மறுக்கிறது. ஏழைகளின் பணி யாளரை பொதுஜனத் தொண்டரை ஆதரிக்க மறுக்கிறது.

மறுப்பது என்? மறுப்பதன் காரணம் என்ன?

தகுந்த தேர்ச்சியில்லையா? பயிற்சி போதாதா? தபால் மூலம் ஓராண்டு காலம் நன்கு படித்து இறுதிச் சோதனையிலும் தேர்ச்சி பெற்று, ஆண்டு தோறும் நடக்கும் நேர்முக வகுப்பில் நல்ல பயிற்சியை பெறுகின்றனரே.

சோதனை செய்து தகுந்த மருந்தைக் கொடுப்பதில்லையா? நோயினைத் தீர்ப்பதில்லையா? எனில்: அதுவும் பொருந்தாதே.

"நோய் நாடி நோய் முதல் நாடி தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்ற தமிழ் மறையை தெரிந்தவர்கள் ஹோமியோ பதியர்கள். தலைவலியா?....... ஆஸ்பரோ சாப்பிடு; மலச் சிக்கலா?....... இருக்கவே இருக்கிறது எப்சம் சால்ட்டு; சுரமா? கம்பௌண்டர்....... கொய்னமிக்ஸர் கொடு, புண்ணா?....... பெரிய நோய் பெனிஸிலின் செய்து கொள், வெட்டை நோயா? குறியை வெட்டி எடுத்து விடலாம் என்று சொல்லமாட்டார்கள். நோயாளியின் குறிகளை நன்கு ஆராய்ந்து தகுந்த மருந்தை

தேர்ந் தெடுத்துக் கொடுப்பர். தேர்ந் தெடுப்ப தென்றால் சாமானியமா? உன்மத்தமே பிடித்து விடுமே. அவ்வளவு சிரமப் பட்டு ஆராய்ந்து தேர்ந்தெடுப்பர்.

'மருந்துகள் சிறந்தவையில்லை, அவற்றின் விலை அதிகம்' என்று கூட சொல்ல முடியாது. மருந்துகளின் வாசனை மூக்கில் நுழைந்த உடன் கூட வேலை செய்யும். எனினும் அவற்றின் விலை மிக மிகக் குறைவு. காலரா மருந்தின் கிரயம் கூட ஒரு தம்பிடி தானே.

மக்களை ஏமாற்றி பணம் பரிக்கின்றனர் என்றும் கூற முடியாது. "உன் ஊர் 5 மைல் தொலைவிலா? ஆனால் சரி: பெட்ரோல் செலவு ரூ 2½ கொடு, இன்றேல் வண்டி வாடகை ரூ 5 கொடு, முடியாவிடில் சைக்கிள் வாடகை ரூ 1½ எடுத்துவை. விசிட்டிங்பீஸ் ரூ 2, டெஸ்ட்பீஸ் ரூ 5 இந்த இஞ்செக்ஷனுக்கு ரூ 5, அதற்கு ரூ 3, உள்ளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து ரூ 7" என்ற அளவில் கொள்ளையடிப்பது இவர்கள் அல்ல. பிரயாணப்படியும் வண்டி வாடகையும் கூட இவர்கள் வாங்குவதில்லை.

மக்களிடம் மண்டிக்கிடக்கின்ற "பதினைந்து ரூபாய் செலவில் கழிப்பு கழித்தால் வலிப்பு நீங்கும், சூல் கலைந்தது சூனியத்தால், வயிற்று வலிக்கு வசிய மருந்தே காரணம், இருசன் பாடம் அடித்தால் இராசபிளவை கூட இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடும், பேய் பிடித்திருக்கிறதா? (ஹிஸ்டீரியா) எருக்கங் கழியால் அடி, இன்றேல் தேய்ந்த செருப்பால் அடி" என்பன போன்றவற்றிற்கு தகுந்த விளக்கம் கூறி அவர்களது அறியாமையை அகற்றி செலவைக் குறைத்து சுகமாகத் தானிருக்கச் சொல்கின்றனரே யொழிய, மக்களிடம் மடைமை நோயை வளர்க்கவில்லை.

"குடி உயரக் கோன் உயர்வான்" என்ற முது மொழியைப் பின் பற்றி, மக்களுக்கு ஏற்படும் நோய்களை அகற்றுவதன் மூலம் மன்றம் மங்காதிருக்கச் செய்கின்றனர். அரசியலாரின் செலவினங்களையும் குறைக்கின்றனரே யொழிய மக்கள்

மந்திரிகளை மட்டரகமாக மதிக்குமாறும், அரசங்கத்தை அலட்சியமாகக் கருதுமாறும் எவ்வித சூழ்ச்சிகளும் செய்வதில்லை.

படாடோபமாக பட்டணங்களில் இருந்து கொண்டு சீமான்களுக்கும் கோமான்களுக்கும் சிகிச்சையளித்து மாளிகைகளிலே சிங்கார வாழ்வு வாழவில்லை. புகைவண்டி வசதி, அஞ்சல் வசதியில்லாத கிராமங்களில், பட்டி தொட்டிகளில், மூலை முடுக்குகளில் வாழ்ந்து கொண்டு: கோமான்களிடம் கூலிக்காக கோழி கூவினது முதல் கோட்டான் கூவும் வரையில் குருதியை வியர்வையாக ஊற்றி கொஞ்சமான கூலியைப் பெற்று கும்பியை நிறப்ப கூழை எடுக்கும்போது குழந்தைகளின் குடல்வாட்டத்தைக் கண்டு தான் குடிக்க இருந்த கூழையும் கொடுத்து விட்டு ஒட்டிய வயிறுடனும், குழி விழுந்த கண்களோடும், குடிசைகளில் வசிக்கிறார்களே, பாமரர், ஏழைகள், அவர்களுக்குச் சிகிச்சையளித்து ஏழைகளோடு ஏழையாக வாழ்கின்றார்கள்.

இப்படியிருக்க ஏன் அக்கீகரிக்க முடியா தென்கின்றனர். அரசியலார்? ஏன் ஆதரவளிக்க மறுக்கின்றனர்?

அவர்கள் கூறும் காரணம் இதுவே. "ஹோமியோபதி முறையில் பலர் தொழில் செய்வது உண்மையே. ஆனால் சர்க்கார் அம்முறையை அங்கீகரித்து ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவு செய்வதனால், அம்முறைக்காக ஒரு கல்லூரியும் ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்த வேண்டி வரும். இது தற்போது உள்ள நிதி நிலைமைகளில் சாத்திய மில்லை."

நிதி நிலைமைகளில் சாத்திய மில்லை என்றால் பணம் இல்லை என்பது தானே பொருள். அவர்களுக்குத்தான் தெரியுமே "க்ஷயரோக ஸ்டாம்பு, குஷ்டரோக ஸ்டாம்பு" என்று அச்சடித்து பொது மக்களிடமே வரி என்று கேளாது பணம் திரட்ட! இதற்கும் ஒரு ஸ்டாம்பு போடக் கூடாதா? போடலாம்; ஆனால் மறுக்கின்றது மன்றம். காரணம் என்ன! மறுப்பதற்கு காரணம் என்ன?

அதுதான் விற்பனை வரியும், வருமான வரியும். அதாவது ஹோமியோபதிக்கு அங்கீகாரம் அளித்து ஆஸ்பத்திரியும், கல்லூரியும் நிறுவினால். அரசாங்கப் பொருள் வருவாய் மார்க்கங்களில் ஒன்றான விற்பனை வரியும் வருமான வரியும் பாதிக்கப்படுகிறது!

அல்லோபதி மருந்துகளின் விலையோ ஹோமியோபதியர் வாங்கும் மருந்து வகைகளின் மூலம் ரூபாய்க்கு மூன்று பை விற்பனை வரி என்று அதிகமான ரூபாய்கள் அரசாங்கத்திற்கு போய்ச் சேருகிறது. ஆனால் ஹோமியோபதியர் வாங்கும் மருந்துகளின் மூலம் இவற்றின் விலை குறைவானதால் அதிக வருமானத்தை அரசியலார் எதிர் பார்க்க முடியாது. மேலும் சர்க்கார் வைத்திய சாலைகளிலும், இதர ஸ்தாபனங்களால் நடத்தப்படும் வைத்திய சாலைகளிலும் உள்ள அல்லோபதி டாக்டர்கள் மாதந்தோறும் நூற்றுக் கணக்கான ரூபாய்களை சம்பளமாகப் பெறுகின்றனர். பிரைவேட்டாக உள்ள வருக்கும் அதிகமான வருமானம் இருக்கிறது அவர்கள் பட்டணவாசிகளானதால். இதன் மூலம் இவர்கள் ஆண்டு தோறும் சர்க்காருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை வருமான வரியாக செலுத்துகின்றனர். ஹோமியோபதியர்களுக்கு அங்கீகாரம் கொடுத்த போதிலும் அவர்கள் கிராமங்களில் இருந்து ஏழைகளிடம் சிறு தொகைக்கே சிகிச்சை செய்வதால் இவர்களின் வருமானம் மிகக் குறைவே. இவர்கள் கட்டும் வருமான வரியும் மிகவும் குறைவாகவே இருக்கும்! எனவே ஹோமியோபதியர்களால் விற்பனை வரி மூலம், வருமான வரி மூலம் வசூலாவது அல்லோபதியர்கள் கட்டும் வருமான வரி ஒன்றிற்கே கூட சரி கட்டாது!

மேலும் தபால் மூலம் ஓராண்டு படிப்பும், நேரில் குறுகிய கால பயிற்சியும் பெறுவோராலேயே இவ்வாறு வருமானம் பாதிக்கப்படுமெனில், கல்லூரியில் இரண்டு மூன்றாண்டுகள் நேரில் படித்துப் பயிற்சி பெறுவோரால் இன்னும் வருமானம் குறையக் கூடும். அதாவது அவர்கள் டாக்டர் ஹானிமன் செய்தது போல் மருந்துகளை நுகரச் செய்தே நோயைத் தீர்ப்பவர்களாகி

விடுவர். அப்போது விற்பனை வரி மிகமிகப் பாதிக்கப் படும் என்பதை ஊகித்து உணர்ந்துள்ளார் மந்திரியார்! எனவே தான் மழுப்புகின்றார். மறுக்கின்றார்.

ஹோமியோபதிக்கு தனி ஆஸ்பத்திரி நிறுவுவதற்கு அதிக செலவாகும் என்று கருதுகின்றனர். அது மிக தப்பிதமான ஆலோசனையேயாகும். இன்று நம்மாகாணத்திலுள்ள எல்லா சர்க்கார் அல்லோபதி ஆஸ்பத்திரிகளிலும் உள்ள மருந்துகளை நீக்கி விட்டு, அங்கெல்லாம் ஹோமியோபதி மருந்துகளாலேயே சிகிச்சை நடைபெறுமாறு செய்வதோடு, புதிதாக 5 கிராமங்களுக்கு ஒரு ஹோமியோபதி வைத்திய சாலையும் நிறுவினால் கூட, ஒரு ஆண்டில் அல்லோபதி வைத்தியத்தின் மூலம் செலவாகும் தொகையேதான் புதிய ஆஸ்பத்திரிகளுக்கும் சேர்ந்து செலவாகும். மக்களின் நோயும் உடனுக்குடன் நீக்கப்படும். மக்களுக்குள்ள வைத்திய சாலையைத் தேடி நெடுந்தூரம் போக வேண்டிய கவலையும் ஒழியும் என்பதற்கையமில்லை.

அரசாங்க வருமானம் குறைகிறது என்ற காரணத்தினால் எந்த வகையிலும் மேன்மையான இந்த ஹோமியோபதிக்கு "அங்கீகாரம் அளிக்க மறுக்கின்றனர் அரசியலார்" என்பதை செவியுறும் ஒவ்வொரு ஹோமியோபதியரும் "நாடு செழிக்க எண்ணி நாளெல்லாம் பாடு படும் ஏழைக்குக் காலமில்லை" என்ற வேதனை கீதத்தைப் பாடாமல் வேறென்ன செய்ய முடியும்?

டாக்டர் மூர்த்தியின்

"கோல்டுராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3-12-0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

சென்னை விலாசம்:

289, N. S. C. B ரோட் - மதராஸ்-1

சிகிச்சை குறிப்பு

(இராமமூர்த்தி, தில்லை நாயகபுரம்)

எனது கிராமத்திலிருந்து, என் வைத்தியசாலை இருக்கும் தில்லை நாயகபுரத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் ஒரு இடத்தில் சிலர் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். சமீபத்தில் நெருங்கி பார்த்தபொழுது ஒரு குழந்தையை இடுப்பு வரையில் பூமிக்குள் புதைத்துக்கொண்டிருந்தனர். குழந்தையோ கதறிக்கொண்டிருந்தது. இப் பரிதாப காட்சியைக் கண்ணுற்ற நான் அங்கிருந்தவர்களிடம் விஷயம் என்ன என்று விசாரித்தேன். எனக்குக் கிடைத்த பதிலில் அக்குழந்தைக்கு இரண்டாண்டுகள் நிரம்பி விட்டதென்றும் இன்னமும் அக்குழந்தை நடக்க ஆரம்பிக்கவில்லையென்பதால் யாரோ ஒருவர் கூறிய இந்த விபரீத யோசனையின்படி பூமியில் புதைக்கிறார்கள் என்றும் கூறினார்கள். இவ்வாறு செய்வதால் அக்குழந்தை நன்கு நடக்கவாரம்பிக்கும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாக தெரிந்தது மீண்டும் விசாரித்ததில் இதே விதமாக தினந்தோறும் செய்துவர வேண்டும் என்றுப் கூறினார்கள். அவர்களை இந்த நடவடிக்கைகளினின்றும் எப்படித் தடுப்பது என்று குழம்பிய மனதுடன் நான் யோசனை செய்து கொண்டிருக்கையில் தற்செயலாக என் நண்பர் ஒருவர் அவ்விடம் வரவே அவரிடம் இது விஷயத்தைக் கூறி அவர்களுக்கு புத்தி சொல்லுமாறும் வேண்டினேன். மேலும் "இக்குழந்தையை எனது ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரச் செய்தீர்களானால் எனது மருந்துகளின்மூலம் இவ்வுபாதையை நிவர்த்திக்க கூடுமானவரையில் முயற்சிக்கிறேன்" என்றும் கூறினேன். எனது நண்பர் அங்கிருந்தவர்களிடம் எடுத்துச் சொல்லி அக்குழந்தையை கரையேற்றுவித்தார். மறுநாட் காலையில் குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரச் சொல்லிவிட்டு நானும் நண்பரும் சென்றோம்.

மறுநாள் குழந்தையின் தகப்பனார் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு என் வைத்தியசாலைக்கு நான் போவதற்கு முன்னதாகவே வந்திருந்தார். குழந்தையை கவனிக்கும்பொழுது அதன் குதி கால்களின் சதையைத் தின்கின்ற ரணங்கள் இருப்பது தெரிந்தது. குழந்தையின் தகப்பனாரிடம் மூன்று பொட்டலங்கள் ஆர்னிகம் ஆல்பம் 6 வீரியத்திலும், மூன்று பொட்டலங்கள் சிலிகா 6 வீரியத்திலும் கொடுத்து தினம் காலையிலும், மாலையிலும் மாற்றி மாற்றி 3 தினங்களுக்கு கொடுத்து விட்டு, நான்காவது தினம் குழந்தையை எடுத்துக் கொண்டு வரச் சொன்னேன். அன்றைய தினம் குழந்தையின் தகப்பனார் கீழ்கண்ட விவரங்களை என்னிடம் தெரிவித்தார்

குழந்தை உணவருந்துவதிலோ, மலப் பிரவர்த்தியாவதிலோ யாதொருகுறைவும் இல்லை. சில சமயங்களில் மலம் போக்காகவே போவதும் உண்டு. வெறுந் தரையில் தான் குழந்தை படுத்து உறங்குவான். தூக்கத்தில் சிறிது சப்தம் கேட்டாலும் திடீரென்று விழித்தெழுந்து விடுவான். 4 நாட்கள் கழித்து பையனின் தகப்பனார் திரும்பி வந்தார். நான் கொடுத்த மருந்துகளை கொடுத்துவிட்டதாகவும், இதுவரை யாதொரு குணமும் தெரியவில்லை என்றும் சொன்னார். அதே மருந்துகளை 30 வீரியத்தில் ஒருவார காலத்திற்கு காணும்படியாக கொடுத்தனுப்பினேன். இவைகளைக் கொடுத்து விட்டு பத்து தினங்கள் பொறுத்து வரச் சொன்னேன். சரியாகப் பத்து நாட்களுக்குப் பிறகு வந்த தகப்பனாரின் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது. விசாரித்ததில் பையன் முன்போல் தரையில் படுப்பதில்லை என்றும், போக்கும் இந்த பத்து தினங்களாக இல்லையென்றும் ஆனால் முக்கியமான விஷயத்தில் யாதொரு குணமும் தெரியவில்லை என்றும் சொன்னார். அதே மருந்துகளோடு கல்கேரியா பாஸ் 6 x பதினைந்து தினங்களுக்குக் காணும்படியாக கொடுத்தனுப்பினேன். இவ்வௌஷதங்களை தொடர்ந்து கொடுத்து வந்ததில் பையனின் குழிப் புண்கள் ஆறி நன்கு காலூன்றி நடக்கத் தொடங்கினான். மூடநம்பிக்கையால் ஒரு குழந்தையை பறிகொடுக்கவிருந்த தகப்பனாருக்கு, ஆரம்ப காலங்களில் எனது மருந்துகளை மிகுந்த அவநம்பிக்கையுடனேயே கொடுத்து வந்தாலும், அதனால் ஏற்பட்ட பலன் அவரை ஹோமியோபதியை என்றென்றும் மறக்க முடியாதவாறு செய்து விட்டதல்லவா!

காலராவுக்கு

ஹோமியோபதி சிகிச்சை சாலச் சிறந்தது

ஆரம்பத்திலேயே ஹோமியோபதி சிகிச்சை செய்தால்
ஒரு கேஸ்கூட தவறாது.

காலரா கண்டவுடன்

ஹோமியோபதி டாக்டரை

தாமதிக்காமல் காணவும்.

மதிப்புரை

ஹோமியோபதி வைத்திய நூல் (ஆசிரியர்: Dr. வி. என். சுந்தரம்- மோகன் நிர்மலா, ஹோமியோபதி பப்ளிஷிங் ஹவுஸ், செவ்வாய் பேட்டை, சேலம்)

ஹோமியோபதி வைத்தியம் நம் தமிழ் நாட்டில் ஊன்றுவதற்குத் தமிழில் புத்தகங்கள் வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி வெளிவரும் புத்தகங்கள் நல்ல தமிழில் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம் விஷயங்களை விடாமல் எழுதப்பட்டிருக்கவேண்டியது அவசியம். இந்த நோக்கத்தைக் கொண்டு பார்க்கும்பொழுது இந்நூலின் ஆசிரியர் இம்முறைக்கு ஒரு தொண்டு செய்துள்ளதாகவே கொள்ளலாம். இந்நூலில் இம்முறையின் வரலாறு, இம்முறையின் சூக்ஷமம், மருந்து உட்கொள்ள வேண்டிய முறை, சில முக்கிய வியாதிகளும் அவற்றிற்கு ஔஷதங்களும் முதலியன விளக்கப்பட்டுள்ளன. சிற்சில இடங்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

இந்நூலின் கிரயம் ரூ. 3—12—0 என்று குறிக்கப்பட்டு பிற்பாடு ரூ. 2—12—0 என்று அறிவிக்கப்படுகிறது.

—*K. V. S.*

காலராவுக்கு

ஹோமியோபதி வைத்தியம் சிறப்புற்றது.

ஹோமியோபதி சிகிச்சை செய்யப்பட்ட காலரா கேஸ்கள் உயிரிழப்பது மிக மிக அபூர்வம்.

காலரா சிகிச்சை புத்தகத்துடன் செட்டாக மருந்துகள் கிடைக்கின்றன.

சிறிய செட் (சுமார் 30 பேர் உபயோகிக்ககூடியது) ரூ. 2
பெரிய செட் (சுமார் 60 ,, ,,) ரூ. 3

(அனுப்புச் செலவுகள் தனி)

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ், கும்பகோணம்.

Edited Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press Homeo House, Kumbakonam.